பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 22 சனிக்கிழமை 07.11.2020 கதிர் 233

## ஆபத்தான வலயமாக மாறுகிறது பொரளை!

கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட ஆபத்தான வலயமாக பொரளைப் பகுதி காணப்படுவதாகச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பொதுமக்களுக்கிடையில் கொரோனா தொற்றுப் பரவல் தொடர்பாகக் கண்டறிய சுகாதார அதிகாரிகள் எழுமாற்று அடிப்படையில்

2

# மூன்றாம் அலை பெரும் சவால்; விரைவில் கட்டுப்படுத்துவோம்!

## இராணுவத் தளபதி சபதம்



**கொழும்பு, நவம்பர் 07**

**இலங்கையில் கொரோனா வைரஸின் மூன்றாம் அலை எமக்குச் பெரும் சவாலாக உள்ளது. எனினும், இதை எம்மால் விரைவில் கட்டுப்படுத்த முடியும். இதில் நாம் உறுதியாக உள்ளோம்.**

**- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

2

## கர்ப்பிணித் தாய்மார்கள் 80 பேருக்குக் கொரோனா

நாட்டில் கொரோனா வைரஸின் மூன்றாவது அலையில் 80 இற்கும் மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார வைத்தியப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிகிச்சையளிப்பதற்காகக் கொழும்பு கிழக்கு வைத்தியசாலையில் விசேட சிகிச்சை நிலையம் நிறுவப்பட்டுள்ளது எனவும் சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

இதுவரையில் 28 கர்ப்பிணிகள் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர் எனவும், அதேவேளை 4 கர்ப்பிணிப் பெண்கள் கொரோனாத் தொற்றுடன் குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர் எனவும் சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## கொரோனா இடர்கால நிதியில் காணியற்ற மக்களுக்கு காணி!

### வடக்கு ஆளுநர் இப்படி ஆலோசனை

**ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் , நவ.07

வடமாகாணத்தில் கொரோனா இடர் காலத்தில் சேகரிக்கப்பட்ட ஒருகோடியே 60 லட்சம் ரூபாவில் பளை மற்றும் வெள்ளாங்குளத்தில் காணிகொள்வனவு செய்து காணியற்ற மக்களுக்கு பெற்றுக் கொடுக்கலாம்எனவடமாகாணஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் ஆலோசனை வழங்கியுள்ளார்.

2

## போகம்பரை சிறைச்சாலையில் 7 கைதிகளுக்குக் கொரோனா!

போகம்பரை சிறைச்சாலையில் 7 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக போகம்பரை சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள 7 கைதிகளும் வெலிக்கந்த கொவிட் 19 வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெலிக்கடை சிறைச்சாலையில் 23 கைதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 22 பேர் பெண்கள் என சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

## தப்பிய ஏழு தொற்றாளர்கள் மின்னேரியாவில் சிக்கினர்!

கொவிட் தொற்றுக்குள்ளான பேலியகொடை மீன்சந்தை தொகுதியின் அலுவலக ஊழியர்கள் நான்கு பேர் இன்று பொலன்னறுவை மின்னேரியா பிரதேசத்தில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டனர்.

முகத்துவாரம் பகுதியில் 07 நபர்களுக்கு கடந்த தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அந்த முடிவுகள் வருவதற்கு முன்னர் அந்நபர்கள் எவருக்கும் அறிவிக்காமல் பொலன்னறுவை, மின்னேரியா மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான விடுதி ஒன்றுக்கு மீன்பிடி கூட்டுத்தாபன வாகனமொன்றில் வந்துள்ளனர்.

கிராமவாசிகள் வழங்கிய தகவல் ஒன்றிற்கு அமைய அந்த இடம் சுகாதார பிரிவினரால் சோதனைக்கு உட்படுத்தப் பட்டபோது இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 4 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 15 நாள்களில் 17 மரணங்கள்

### மூன்றாவது அலை மூலம் 9,496 பேருக்குத் தொற்று

இலங்கையில் கடந்த 23ஆம் திகதி முதல் நேற்று வரையான 15 நாட்களுக்குள் 6 ஆயிரத்து 683 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. அத்துடன், 17 பேர் பலியாகியுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் ஒரே நாளில் அதிகளவான தொற்றாளர்கள் (866) கடந்த 23 ஆம் திகதி அடையாளம் காணப்பட்டனர். ஒரே நாளில் அதிகளவானவர்கள் (765) நேற்றுமுன்தினம் (05) குணமடைந்தனர்.

இலங்கையில் மூன்றாவது அலை மூலம் நேற்று வரை 9 ஆயி ரத்து 496

2

## செயலகக் கூட்டத்தில் கலந்துகொண்டோருக்கான தனிமைப்படுத்தல் உத்தரவு உடன் விலக்கப்பட்டது!

### மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் தலையீட்டை அடுத்து

**(ந.லோகதயாளன்)**

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற அமைச்சர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலாளர் மற்றும் கோப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் ஆகியோரைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு கோப்பாய் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அறிவுரை வழங்கியபோதும் மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் அறிவுரையின் பெயரில் தனிமைப்படுத்தல் உத்தரவு விலக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் 200 பேர் வரையில் கலந்துகொண்டமை தொடர்பில் பிரதேச செயலாளர் சுகாதார வைத்திய அதிகாரியால் தனிமைப்படுத்தப்பட்டார்.

தனிமைப்படுத்தல் அறிவித்தல்

2

## தனிமைப்படுத்தப்பட்டவர் மீரியகமவில் உயிரிழப்பு!

மீரியகம - பல்லேவெல பகுதியில் வீட்டில் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 68 வயதானவரே உயிரிழந்துள்ளார் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், உயிரிழந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக வாதுபிட்டிவல வைத்திய சாலைக்குக் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2

## போகம்பர சிறைச்சாலைக்குள்ளும் நுழைந்துள்ளது கொரோனா வைரஸ்

### இதுவரை 7 கைதிகளுக்குத் தொற்று

கொழும்பு, நவ.07

போகம்பர சிறைச்சாலைக் குள்ளும் கொரோனா வைரஸ் தொற்று பரவியுள்ளது.

இலங்கையில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் வெலிக்கடைச்சிறைச்சாலையைத் தொடர்ந்து தற்போது போகம்பர சிறைச்சாலைக்குள்ளும் நுழைந்துள்ளதை சிறைச்சாலைகள் ஆணையாளர் இன்று உறுதிப் படுத்தினார்.

2

## சஹ்ரானின் மனைவிக்கும் கொரோனா வைரஸ் உறுதி

### வெலிக்கடைச் சிறையிலிருந்து வெலிக்கந்தைக்கு மாற்றப்பட்டார்



வெலிக்கடைசிறைச் சாலைகொரோனாகொத் தணியில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசீமின் மனைவியான அப்துல் காதர் பாத்திமாவும் சிக்கியுள்ளார்.

அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

2

## கிழக்கில் 100 பேருக்குக் கொரோனா!



கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது.

இறுதியாக மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர்ப்பிரிவில் மேலும் 4 பேருக்கும், மட்டக்களப்பில் 2 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனக் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

இதுவரை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில்

2

## சஹ்ரானின் மனைவிக்கும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் இன்று அவர் சேர்க்கப்பட்டார்.

விசேட அதிரடிப்படையினரால் அவர் கடும் பாதுகாப்புடன் அங்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இதுவரை 30 பேர் கொரோனாத் தொற்றால் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 26 பேர் பெண் கைதிகள், 3 பேர் ஆண் கைதிகள் மற்றும் ஒருவர் சிறைச்சாலை அதிகாரியாவார்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் அனைவரும் வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

## கிழக்கில் 100 பேருக்குக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

60 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 13 பேரும், கல்முனைபி பிராந்தியத்தில் 20 பேரும், அம்பாறைப் பகுதியில் 7 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய, கிழக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, கல்முனைப் பிராந்தியத்தில் வணக்கஸ்தலங்கள் மீதான தடை இன்னும் நீக்கப்படவில்லை என்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

என்னாலோ அல்லது எனக்குக் கீழான எந்தவொரு அதிகாரிகளினாலோ பள்ளிவாசல்களோ, கோயில்களோ, கிறிஸ்தவ தேவாலயங்களோ, விகாரைகளோ மீண்டும் பொதுமக்களுக்காகத் திறப்பது சம்பந்தப்பட்ட எந்தவிதமான புதிய அறிவுறுத்தல்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை. விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். – என்றார்.

## போகம்பர .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு 7 கைதிகளுக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலையில் பலத்த பாதுகாப்புடன் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## 15 நாள்களில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி மினுவாங்கொடை கொத்தணி மூலம் ஆயிரத்து 41 பேருக்கும், பேலியகொட கொத்தணி மூலம் ஆயிரத்து 7 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது. ஏனைய 7 ஆயிரத்து 448 பேரும் இவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களாவர். மினுவாங்கொடை கொத்தணி மூலம் வைரஸ் தொற்றியவர்களில் இதுவரை 3 ஆயிரத்து 350 பேர் குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 970 ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் 5 ஆயிரத்து 217 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 7 ஆயிரத்து 723 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதேவேளை, 30 பேர் சிகிச்சைகளின் போது உயிரிழந்துள்ளனர்.

## செயலகக் கூட்டத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டமை தொடர்பில் பல அழுத்தங்களின் காரணமாக தனிமைப்படுத்தல் விலக்கப்பட்டமை தொடர்பில் மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த விடயம் தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலின் பெயரிலேயே செயற்பட்டோம். இதற்கும் அப்பால் தகவல் தேவைப்பட்டால் மத்திய சுகாதார அமைச்சைத் தொடர்பு கொண்டு கேளுங்கள் என்று பதிலளித்தார்.

இதேநேரம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தின் சர்ச்சை ஓய்வதற்கு முன்பு நாளையும் கூட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதால் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள சில அதிகாரிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

## மூன்றாம் அலை பெரும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய நிலைமையில் உயிரிழப்புகளையும் சந்தித்துத்தான் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதவர்கள் தொற்றின் தாக்கத்தால் வீட்டிலேயே இறக்கின்றார்கள். இது தவிர்க்க முடியாத நிலைமை.

கொரோனாவால் நாட்டின் பல இடங்களில் முடக்கல் நிலையை ஏற்படுத்தியுள்ளோம். இந்த முடக்கல் நிரந்தரம் இல்லை. படிப்படியாக முடக்கலைத் தளர்த்துவோம். முழு நாட்டையும் முடக்கல் நிலையில் வைத்திருக்கும் எண்ணம் எம்மிடம் இல்லை. எத்தனையோ மக்கள் நாளாந்த வாழ்வாதாரத்தை நம்பியே வாழ்கின்றார்கள் – என்றார்.

## தனிமைப்படுத்தப்பட்டவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீரிகம – பல்லேவெல பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டமையையடுத்து, அப்பகுதியிலுள்ள சில வீடுகளில் வசிப்பவர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டனர். அவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவரே தற்போது உயிரிழந்துள்ளார்.

இதேவேளை புத்தளத்தில் நேற்றைய தினம், சுயதனிமைப்படுத்தலுக்காக வீடு திரும்பியவர் சடலமாக கண்டெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆபத்தான வலயமாக ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது நூற்றுக்கு 90 வீதமானவர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களை சிகிச்சை மையங்களுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட பிரதேசத்தைக் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களை வீடுகளில் சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பி டத்தக்கது.

## கொரோனா இடர்கால ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாண கொரோனா தடுப்பு செயலணியின் கலந்துரையாடல் மாகாண ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றிருந்தது. அதன் நிறைவிலேயே ஆளுநர் மேற்படி ஆலோசனையை வழங்கியதாக அறிய முடிகிறது. வடக்கு மாகாண சபையால் சேகரிக்கப் பட்ட ஒரு கோடியே 60 லட்சம் ரூபா பணத்தைக் கொண்டு மாகாணத்தில் காணியற்ற மக்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு குறைந்தபட்சம் 40 பேர்ச் காணிகளைப் பெற்றுக் கொடுக்கலாம்.

கைவசம் உள்ள நிதி நிலைமைக்கேற்ப கொள்வனவு செய்யக்கூடிய அளவு காணியை அதிக பாதிப்புடைய குடும்பங்களில் இருந்து பயனாளிகளைத் தேர்வு செய்ய முடியும். அதே நேரம் கிடைத்த பணத்தில் மிகவும் பிரயோசண மான ஓர் திட்டமாகவும் இது அமையும். அரச அதிகாரிகளை நம்பி வழங்கிய நிதி என்பதால் மிகவும் திட்டமிட்டு பணியாற் றுவது மிகவும் முக்கியமானது. இதே நேரம் பளையில் 160 ஏக்கரும் வெள்ளாங்குளத்தில் 30 ஏக்கர் நிலமும் அரசவசம் எல்.ஆர்.சி காணிகள் உள்ளன. இதனை ஏக்கர் ஒரு லட்சத்துக்கும் உட்பட்ட பெறுமதியில் கொள்வனவு செய்ய முடியும் அதற்கான பணியை முன்னெடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

17 விற்பனையில்.... ஆவது இதழ்

முற்றிலும் மாறுபட்ட தனித்துவமான செய்திக் கட்டுரைகளுடன்

வாழ்க்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற பல்சுவை வார இதழ்







செம்மணி
புத்தம் புதிய பல்சுவை வார மலர்

கொழும்பு மற்றும் கிழக்கிலும்
அருகில் உள்ள
பத்திரிகை முகவர்களிடம்
தவறாது கேட்டு வாங்குங்கள்

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ‘திருவிழா’ திருகுதாளம்

சட்டத்தையோ, விதிமுறையையோ பிரகடனப்படுத்தும் அதிகாரத் தரப்பு அதனை நேர்மையாக – முழுமையாக – உண்மையாக நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

‘ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி’ என்ற பாணியில் நடப்பது அபத்தமானது.

நாட்டையே உலுப்பும் ‘கொவிட் 19’ என்ற கொரோனாத் தொற்று விவகாரத்தில் ஆளும் தரப்பின் செயற்பாடு அப்படித்தான் இருக்கின்றது.

முதன்முதலில் கொரோனாத் தொற்று கட்டவிழ்ந்த போது கிடைக்கப் பெற்ற பாடத்தை – பட்டறிவை – அரசு சரிவர உணர்ந்து கொள்ளவில்லைப் போலும்.

ஆரம்பத்தில், ஊரடங்கு பிரகடனப்படுத்தப்பட்டு முழு நாடுமே முடக்கப்பட்டது. மாகாணங்கள், மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டது. பொருளாதார ரீதியிலும், வாழ்வியல் ரீதியிலும் பல நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்டனர். மாவட்டங்கள் தாண்டி மக்களைப் பயணிக்க விடாமல் இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. கொழும்பில் நடைபெறும் இரத்த உறவின் மரண வீட்டில் கூட பங்குபற்ற முடியாமல் ஊரில் இருந்தபடி வீட்டில் அழுது முடித்தனர் பலர்.

ஆனால், படையினர் மட்டும் கொரேனா விவகாரத்தில் தனித்துவ மனிதர்கள் என்பது போல செயற்பட அனுமதிக்கப்பட்டனர். விடுதலையில் செல்லும் படையினர் மட்டுமே எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி மாவட்டம், விட்டு மாவட்டம் செல்லவும், மாகாணங்களைத் தாண்டியும் "Super Human' போல கருதி பயணிக்க அனுமதிக்கப்பட்டனர். வெலிசறைக் கடற்படை முகாமை ஒட்டி ஒரு கொத்தணித் தொற்று ஏற்பட்ட போதுதான் இதன் விபரீதத்தை அரசு உணரத் தலைப்பட்டது. அதன் பின்புதான் மாவட்டங்களுக்கு இடையில் படையினர் பயணிக்கவும் தடை விதிக்கப்பட்டது.

இப்போது நிலைமை அப்படித்தான். மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்து தடுக்கப்பட்டிருக்கின்றது. கொழும்புக்கு ஒரு நாள் அவசர வேலையாக ஒருவர் சென்று வந்தாலேயே அவரை பதினான்கு நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் ‘சிறை’ வைக்கும் கெடுபிடி மிகத் தீவிரமாக இங்கு பின்பற்றப்படுகின்றது.

ஆனால், மறுபுறத்தில் நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்தமை போல – நாளை இன்னொரு தடவை நடக்கப் போகின்றமை மாதிரி – பல நூறு பேரை வெளிமாவட்டங்கள் மற்றும் கொழும்பில் இருந்து கூட்டி வந்து, குறுகிய மண்டபத்தில், மிக நெருக்கமாகக் கதிரைகளைப் போட்டு, நெருக்கியடித்து நின்று, கூட்டம் நடத்தும் ‘திருவிழா’ மாவட்டங்கள் தோறும் தாராளமாகத் தொடரப்போவதாகக் கூறப்படுகின்றது.

தற்போது, சுமார் 30 அமைச்சர்கள் உள்ளனர். தவிரவும், பல இராஜாங்க அமைச்சர்களும் இருக்கின்றனர். இவர்கள், அவரவர் வகிக்கும் அமைச்சுப் பதவிகளுக்கு அமைய நான்கு தலைப்புகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வகைப் பிரிவினரும் ஒரு கூட்டமாக ஒரே மாவட்டத்தில் போய் அமர்ந்திருந்து, அங்குள்ள அதிகாரிகள், எம்.பிக்கள் மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் போன்றோரைச் சந்தித்துத் திட்டங்களை வகுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அரசின் – ஜனாதிபதியின் – ஏற்பாடாம்.

அதில், அந்த அமைச்சர் குழாமின் முதல் கூட்டம்தான் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்றிருக்கின்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான கூட்டம் அது. அடுத்த அமைச்சர்கள் தொகுதிக்கான கூட்டம் நாளை நடக்கவிருக்கின்றது.

ஆக, இவை போல இன்னும் இரண்டு அமைச்சர் குழுக்களின் கூட்டங்கள் யாழ்ப்பாணத்தில் எஞ்சியிருக்கின்றன. அவையும் விரைவில் நடக்கும் எனக் கூறப்படுகின்றது.

ஆயின், நேற்று, நாளை மற்றும் இரண்டு கூட்டங்கள் என்று வெளி மாவட்டங்களிலிருந்து மொத்தமாக நான்கு படையெடுப்புகள் யாழ், கிளிநொச்சி மாவட்டங்களுக்குப் பொதுவாக யாழ் செயலகத்தில் நடக்கும்.

அதேபோன்று, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கான அமைச்சர்கள் படையெடுப்பு இப்படி நான்கு கூட்டங்களாகத் தனியாக வவுனியாவில் நடக்கும்.

இது, வடக்குக்கு மட்டுமல்ல. இந்த ஏற்பாடு இலங்கை முழுவதுக்கும் என்று கூறப்படுகின்றது. அது உண்மையானால் இது போன்ற படையெடுப்புக் கூட்டங்கள் இலங்கை முழுவதும், மொத்தம் ஐம்பதுக்கு மேல் நடைபெறப் போகின்றன.

இப்படி ஒருபுறம் மாவட்டங்களுக்கு இடையில் – வடக்குக்கும் தெற்கும் இடையில் – மேற்குக்கும் கிழக்கும் இடையில் – கூட்டங்களை நடத்தியபடி, மறுபுறம் கொரோனாவைக் கட்டுப்படுத்த இறுக்கமான நடவடிக்கை என்று கூறுவது அபத்தத்திலும் அபத்தம் வேடிக்கையிலும் வேடிக்கை. இதனைக் கேலிக் கூத்து என்றே கூறலாம்.

ஐ.நா. அமர்வுகள் வரை பல சர்வதேச் விவகாதங்களே இணைய வழியில் – காணொலி ஊடாக – ‘சூம்’ முறையில் – நடைபெறத் தொடங்கிய பின்னரும் கூட, இத்தகைய முடக்க நிலைக்கு மத்தியில், இப்படிக் கூட்டம் போட்டு அரசியல் திருவிழா நடத்துவது முற்றிலும் முட்டாள்தனமின்றி வேறில்லை.

# மினுவாங்கொடை கொரோனா பரவல் விசாரணை முன்னெடுப்பதில் சிக்கல்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா வைரஸ் பரவியமை தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

பொலிஸ்ஊடகபேச்சாளர்பிரதிபொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைவாக, மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் கொரோனா தொற்று பரவியமை தொடர்பில்விசாரணைகளைமேற்கொள்ளும் பணி கொழும்பு குற்றப்புலானாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் அதில் தற்போது சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவில் தற்போதுவரை 40 அதிகாரிகள் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவின் தனிமைப்படுத்தல் முகாமில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதனால், தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களிடமிருந்தே வாக்குமூலங்களைப் பெற வேண்டியுள்ளது. இதன் காரணமாகவும் விசாரணைகள் தாமதமடைகின்றன.

எவ்வாறாயினும் இந்த விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கே நாம் எதிர்பார்த்துள்ளோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணையகத்தில் முறைப்பாடு!

## ஐக்கிய மக்கள் சக்தி செய்தது

ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக பரிசீலனைகளை செய்துவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மக்களின் பணத்தை முறைகேடாகப் பயன்படுத்தி வருவதாக ஐக்கிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், அதற்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சட்டவிதிகளுக்கமைய சட்டநடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கட்சி கோரியுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ, மயாந்த திசாநாயக்க, நளின் பண்டார, ஜே.சீ.அலவத்துவல மற்றும் சுஜித் சஞ்சய பெரேரா ஆகியோரே இவ்வாறு முறைப்பாடு அளித்துள்ளனர்.

மேலும், அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நாட்டின் சட்டவிதிகளுக்குப் புறம்பாகச் செயற்பட்டு வருவதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

# சாதாரணதரப் பரீட்சைக்கான திகதி அறிவிக்கப்பட்டன

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைகளை எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரியில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சாதாரண தரப்பரீட்சை 2021ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 28ஆம் திகதி வரை நடைபெறும் என அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொரோனா அச்சத்துக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைகள் நேற்றுடன் நிறைவடைந்துள்ளன.

கொரோனா அச்சம் காணப்பட்ட போதிலும் கடந்த 12ஆம் திகதி முதல் நேற்றுவரை இந்தப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளன.

இம்முறை பரீட்சைகளின் போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மாணவர்கள் 29 பேர் ஐ.டி.எச். வைத்தியசாலையிருந்து பரீட்சைகளுக்குத் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனைத்து ஆலயங்ளிலும் விசேட பிரார்த்தனை நல்லை ஆதீனக் குருமகாசந்நிதானம் அழைப்பு



கொரோனா தொற்றிலிருந்து மீட்சிபெற வேண்டி அனைத்து ஆலயங்களிலும் இன்று முதல் விசேட பிரார்த்தனைக்கு நல்லை ஆதீனம் அழைப்பு விடுத்துள்ளது.

இதன்படி, இன்று முதல் 10 நாள்களுக்கு நண்பகல் 12 மணிக்கு தொடங்கி 10 நிமிடங்கள் மணி ஒலிக்கச் செய்து அனைத்து மக்களும் பிராத்தனை செய்வதற்கு ஆலய நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம் வலியுறுத்தியுள்ளது.

அனைத்து மதத் தலைவர்களும் இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும் என நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், கலாநிதி ஆறு திருமுருகன், ஸ்ரீ தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பாக, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் –

கொரோனா எனும் ஆபத்தான நோயின் அவலம் மூன்றாவது அலையாக அதிகரிக்கும் வேளையில் பொதுமக்கள் மிகக் கவனமாக உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் அனைத்து மக்களையும் காத்தருள சிவப் பரம்பொருளை முதற்கண் மன்றாடி, வேண்டுதல் செய்வோம். அனைவரும் பிராத்தனைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்!

01.ஆலயங்களில் பக்தர்கள் கூடுவதைத் தவிர்த்து வீட்டில் அமைதியாகப் பிரார்த்தியுங்கள்.

02.ஆலயங்களில் நித்திய நைமித்திய பூஜை வழிபாடுகள் நடைபெறவேண்டும். அதற்கு இடையூறின்றி ஒத்துழையுங்கள்.

03.சிறுவர்கள், முதியோர், நோயாளர்கள் வீட்டைவிட்டு வெளியில் வருவதை இயன்றவரை தவிருங்கள்.

04.சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களுக்கு அனைவரும் மதிப்புக் கொடுங்கள்.

05. நோயாளர்களுக்கு உதவும் மருத்துவத் துறையினரின் பாதுகாப்புக்கு அனைவரும் உதவுங்கள். அவர்களுக்காகவும் கடவுளை வேண்டுங்கள். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியா - சீனா இடையிலான பேச்சு எந்த முன்னேற்றமும் இன்றி முடிவு!

## இந்திய வெளியுறவு அமைச்சு



இந்தியா – சீனா இராணுவ உயரதிகாரிகள் இடையில் எட்டாவது சுற்றுப் பேச்சு 9 மணி நேரத்துக்கும் மேலாக நீடித்துள்ளது.

ஆனாலும், நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற இந்தப் பேச்சில் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை என இந்திய வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லடாக் பகுதியில் குவிக்கப்பட்ட படைகள் அனைத்தையும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்று இந்தியா சீனாவுக்கு இதன்போது வலியுறுத்தியுள்ளது.

மேலும், மே மாதத்துக்கு முந்தைய நிலைப்பாட்டை எல்லைக்குக் கொண்டு வந்தால்தான் அமைதியும் பரஸ்பர நம்பிக்கையும் சாத்தியமாகும் என இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எல்லையில் பதற்றம் நீடித்தாலும் கட்டுக்குள் கொண்டு வர இரு நாட்டு இராணுவ உயரதிகாரிகளும் நேரடித் தொடர்பில் இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விண்ணில் செலுத்தப்படுகிறது பி.எஸ்.எல்.வி.சி – 49 ரொக்கெட்!



ஆந்திர மாநிலம் – ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து 10 செயற்கைகோள்களை ஏந்தியவாறு, பி.எஸ்.எல்.வி.சி – 49 ரொக்கெட்டை இன்று (சனிக்கிழமை) விண்ணில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இஸ்ரோவின் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோளான இ.ஓ.எஸ் – 01 இந்த ரொக்கெட்டில் அனுப்பப்படுகிறது. சின்தடிக் அபர்சர் ரேடோர் ஊடாக புவியை அனைத்து தட்பவெப்பநிலைகளிலும் படங்களை எடுத்து கண்காணிக்க இந்த செயற்கைக்கோள் உதவும் எனக் கூறப்படுகின்றது.

மேலும், லிதுவேனியா நாட்டைச் சேர்ந்த ஒரு செயற்கைகோள், லக்சம்பர்க் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த தலா 4 செயற்கைகோள்களும் இந்த ரொக்கெட்டில் அனுப்பப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதித் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஏவப்பட உள்ள இந்த ரொக்கெட்டுக்கான, 26 மணி நேர கவுண்டவுன் நேற்று ஆரம்பமாகியது.

அந்தவகையில் இன்று பிற்பகல் 03.02 மணிக்கு பி.எஸ்.எல்.வி.சி 49 ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட உள்ளதால் இறுதிக்கட்டப் பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சீனாவுடன் மிகப்பெரும் மோதல் ஏற்படும் என்கின்றது இந்தியா!

### முப்படைகளின் தளபதி பிபின் ராவத்




எல்லைத் தகராறு தொடர்ந்தால் சீனாவுடன் மிகப் பெரிய மோதல் ஏற்படும் என முப்படைகளின் தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு கல்லூரியின் வைரவிழாவில் காணொளி தொடர்பாடல் மூலம் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எல்லையில் அத்துமீறிய சீனா இராணுவம், இப்போது இந்திய இராணுவத்தின் தக்க பதிலடியால் எதிர்பாராத பின் விளைவுகளைச் சந்தித்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், எல்லை கட்டுப்பாட்டுக் கோட்டை மாற்றி அமைக்கும் பேச்சுக்கே இடமில்லை என்று தெரிவித்துள்ள அவர், லடாக் எல்லையில் பதற்றம் தொடர்கிறது எனக் கூறியுள்ளார். இந்நிலையில், தொடர் அத்துமீறல்களும், அதிரடியான இராணுவ செயற்பாடுகளையும் சீனா தொடர்ந்தால், பெரிய மோதல் ஏற்படுமென அவர் எச்சரித்துள்ளார்.

## கோவக்சின் தடுப்பு ஊசி பெப்ரவரியில் கிடைக்கும்!

கொரோனா வைரஸுக்கு எதிராக இந்தியாவில் தயாரிக்கப்படும் தடுப்பூசி அடுத்தாண்டு பெப்ரவரி மாதத்தில் கிடைக்கும் வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.




கொரோனா வைரஸுக்கு எதிராகத் தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சி பல நாடுகளில் நடந்து வருகின்றது. அதில் பெரும்பாலானவை இறுதிகட்ட பரிசோதனையில் உள்ளன.

மத்திய அரசின் ஐ.சி.எம்.ஆர். எனப்படும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் முயற்சியில் 'கோவாக்சின்' என்ற தடுப்பூசி உருவாக்கப்பட்டு வருகிறது. இதனை 'பாரத் பயோடெக்' நிறுவனம் உருவாக்கி உள்ளது. இதன் இறுதி கட்டப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மூத்த விஞ்ஞானி ரஜினிகாந்த், முதல் இரண்டு கட்டப் பரிசோதனைகளில் இந்த தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது, பலனளிக்கக் கூடியது என உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்து அடுத்தாண்டின் மத்திய பகுதியில் தான் பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் பெப்ரவரியில் அறிமுகம் செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பேரறிவாளனுக்கு விடுப்பு மேலும் 2 வாரம் நீடிப்பு!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக இருந்து வரும் பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட விடுப்பை மேலும் 2 வார காலம் நீடித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவிற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றை காரணம் காட்டி 30 நாள்கள் அவருக்கு விடுப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பேரறிவாளனின் விடுப்பு வரும் நவம்பர் 9 ஆம் திகதியோடு முடிவடைகிறது. எனவே மேலும் 30 நாள்கள் விடுப்பை நீடிக்கக் கோரி அற்புதம்மாள் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், பேரறிவாளனுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவச் சிகிச்சையைத் தொடர வேண்டியுள்ளது. எனவே விடுப்பு காலத்தை நீடிக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மருத்துவச் சிகிச்சையைக் கருத்தில் கொண்டு பேரறிவாளனுக்கான விடுப்பை வரும் நவம்பர் 23 ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிட்டனர்.

## தடையை மீறி வேல் பாதயாத்திரை பா.ஜ.க. தலைவர் முருகன் கைது!

திருத்தணியில் தடையை மீறி வேல் யாத்திரையை தொடங்கிய பா.ஜ.க. தலைவர் எல்.முருகன் கைது செய்யப்பட்டார்.

தமிழக பா.ஜ.க. சார்பில் நேற்று வெற்றிவேல் யாத்திரை தொடங்குவதாக அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் பா.ஜ.க.வினரின் வெற்றிவேல் யாத்திரைக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று சென்னை உச்ச நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. தமிழக அரசும் இதற்கு அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் திருத்தணியில் தடையை மீறி தொடங்கிய பா.ஜ.கவின் வேல் யாத்திரையை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். வேல் யாத்திரையை தொடங்கிய மாநில தலைவர் எல்.முருகன் கைது செய்யப்பட்டார். அண்ணாமலை உள்ளிட்ட நிர்வாகிகளைக் கைது செய்து பஸ்ஸில் பொலிஸார் அழைத்து சென்றனர்



கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி – 1992.10.28 | பிறந்த திகதி – 1990.06.14 |
| மதம் – பத்தர் | மதம் – இந்து V |
| நட்சத்திரம் – அனுசம் 2 | நட்சத்திரம் –சதயம் |
| பாவம் – 24 3/4 | பாவம் – 31 1/2 |
| சூரி/ செவ் – 8 இல் 8 புள்ளி | கல்வி – பட்டதாரி |
| கல்வி – software Engineer | தொழில் – ஆசிரியர் |
| தொழில் – Engineer | எதிர்பார்ப்பு – அரச உத்தியோகம். |
| எதிர்பார்ப்பு – பட்டதாரி, அரச தொழில், அழகான பெண். | |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# மறுவாக்கு எண்ணிக்கை நடத்த சட்ட நடவடிக்கை 6 கோடி டொலர்கள் நிதி திரட்ட ட்ரம்ப் முயற்சி!

ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடும் ஜோ பைடன் முன்னிலை வகித்துவரும் சில மாகாணங்களில், மறுவாக்கு எண்ணிக்கை நடத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளுக்காக, 6 கோடி டொலர்கள் நிதி திரட்ட குடியரசு கட்சி முயற்சிசெய்து வருகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் 270 இடங்கள் பெறவேண்டும் என்ற நிலையில் ஜோ பைடன் 264 இடங்களைப் பெற்றுள்ளார். டொனால்ட் ட்ரம்ப் 214 இடங்களில் வெற்றிபெற்றுள்ளார்.

இந்நிலையில், பென்சில்வேனியா, ஜோர்ஜியா, நெவாடா, வட கரோலினா மற்றும் அலாஸ்கா ஆகிய ஐந்து மாநிலங்களில் இன்னும் வாக்கு எண்ணிக்கை முடிவடையாமல் நீடித்து வருகிறது.

எனினும், இதுவரை டொனால்ட் ட்ரம்புக்கு சாதகமாக இருந்த ஜோர்ஜியா மற்றும் பென்சில்வேனியாவில் ஜோ பைடன் தற்போது முன்னிலை பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் 50 மாகாணங்களில் இதுவரை 46 இடங்களில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுஉள்ளன. ஜார்ஜியா, பென்சில்வேனியா, வடக்கு கரோலினா, நெவெடா ஆகிய 4 மாகாணங்களில், வாக்கு எண்ணும் பணி நடைபெற்று வந்த நிலையில் ஜார்ஜியா, பென்சில்வேனியா மாகாணங்களில் ஜோ பைடன் முன்னிலை வகிக்கிறார் எனச் செய்திகள் வெளியாகின.

தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் நடந்துள்ளன என ட்ரம்ப்



தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறார். ஜார்ஜியா மாகாணத்தில் பதிவான வாக்குகளை மறு எண்ணிக்கை நடத்தக் கோரி நீதிமன்றத்தில் ட்ரம்ப் தொடர்ந்த வழக்கு தள்ளுபடியான நிலையில், ஜார்ஜியா மாகாண அரசாங்கம் மறு வாக்கு எண்ணிக்கை நடத்த அனுமதி அளித்துள்ளது.

ஜோ பைடன் முன்னிலை வகித்து வரும் மேலும் சில மாகாணங்களிலும், மறுவாக்கு எண்ணிக்கை நடத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளை ட்ரம்ப் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், ட்ரம்ப் மேற்கொண்டு வரும் சட்ட நடவடிக்கைகளின் செலவுகளுக்காக குடியரசு கட்சியின் சார்பில் நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக அக்கட்சியினர் கொடையாளிகளிடம் நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், சுமார் 60 மில்லியன் டொலர்கள் நிதி திரட்ட அவர்கள் முயற்சித்து வருகின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வெள்ளை மாளிகை உயர் அதிகாரிக்கும் கொரோனா!

வெள்ளை மாளிகையின் உயர் மட்ட அதிகாரியான மார்க் மெடோஸிற்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொரோனா தொற்றால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பிறகு இந்த செய்தி வருகிறது .

மேலும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது. தேர்தலில் அதிகாரிகள் பதற்றமான சூழ்நிலையில், வெள்ளை மாளிகைக்கு மேலும் அதிருப்தி அளித்துள்ளது.

61 வயதான மெடோஸ் செவ்வாயன்று இடம்பெற்ற தேர்தலுக்குப் பிறகு அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக மக்களிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில், அவர் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றவில்லை மற்றும் பெரும்பாலும் முகக்கவசம் அணியாமலே காணப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கட்கிழமைகளில் இறுதி பிரசார நடவடிக்கைகளின் போது ட்ரம்புடன் பயணம் செய்துள்ளார்.

செவ்வாயன்று தனது பிரசார தலைமையகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியுடன் சென்று வெள்ளை மாளிகையின் தேர்தல் இரவு விருந்தில் கலந்து கொண்டுள்ளார். அங்கு அவர் ஜனாதிபதியின் குடும்ப உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார் . அந்த எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் முகக்கவசம் அணிந்திருந்தமையைக் காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்று நோய் பரவ தொடங்கியதிலிருந்து அமெரிக்காவில் 2 லட்சத்து 36 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளமையுடன், 9.7 மில்லியன் அமெரிக்கர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய அரபு இராட்சியத்துக்குப் பாதுகாப்பு உபகரணம் வழங்கவுள்ளது ட்ரம்ப் நிர்வாகம்!

ஐக்கிய அரபு ராஜ்ஜியத்துக்கு பாதுகாப்பு உபகரணங்களை விற்பனை செய்வதற்கான முறைசாரா உத்தரவு ஒன்றை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் அமெரிக்க காங்கிரஸுக்கு அனுப்பி வைத்துள்ளது.

ஏவுகணைகள், ட்ரோன் இயந்திரங்கள் உள்ளிட்ட 10 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்களை வழங்குவதற்கான யோசனையே இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இந்தத் திட்டம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தால் அனுப்பி வைக்கப்பட்டமையைத் தொடர்ந்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த வியாழக்கிழமை குறித்த ஆணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.



எவ்வாறாயினும் இந்தச் செய்தி அமெரிக்க காங்கிரஸால் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், உத்தியோகபூர்வ தகவல்கள் கிடைக்கப்பெறும்வரை தாம் எந்தவொரு முன்மொழிவுகளை உறுதிப்படுத்துவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெ. ஜனாதிபதித் தேர்தல் மேற்பார்வை அதிகாரி சாவு!

### கொரோனா வைரஸே காரணம்

அமெரிக்காவின் மிசோரி மாகாணத்தில் ஜனாதிபதித் தேர்தல் மேற்பார்வையில் ஈடுபட்ட அதிகாரி ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அதிகாரி தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபட்டிருந்தார் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவரது உயிரிழப்புக்கான காரணம் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை என சென்.சார்ள்ஸ் மாநகர பொதுச்சுகாதார பிரிவு வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தும் அந்த அதிகாரி கடந்த ஒக்ரோபர் 30 திகதி மேற்கொண்ட பரிசோதனையில் கொவிட்19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறித்த தேர்தல் கண்காணிப்பாளரை 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்திய போதும், அவர் அவை எவற்றையும் கணக்கில் எடுக்காது கடந்த செவ்வாய்க்கிழமை சென்.சார்ள்ஸ் வாக்களிப்பு மையத்தில் கடமையில் இருந்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகிறது. எனினும் அவர் எப்போது உயிரிழந்தார் என்ற விடயத்தை மாநாகர சுகாதாரப் பிரிவு தெளிவாகக் குறிப்பிடவில்லை.

## அமெரிக்காவில் கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை ஒரு கோடியை கடந்தது!



அமெரிக்காவில் அசுரவேகத்தில் பரவும் கொரோனா வைரஸ் (கொவிட் -19) தொற்றால், பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளி விவரங்களின் படி, அமெரிக்காவில் மொத்தமாக ஒரு கோடியே 32 ஆயிரத்து 540 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் அமெரிக்காவில், ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 540 பேர் பாதிக்கப்பட்டுள்ளமையோடு, ஆயிரத்து 248 பேர் உயிரிழந்துள்ளனர்.


அமெரிக்காவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

உலகளவில் கொவிட் -19 தொற்றால் அதிகபாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல்நாடாக விளங்கும் அமெரிக்காவில் இதுவரை மொத்தமாக இரண்டு லட்சத்து 42 ஆயிரத்து 230 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட 34 இலட்சத்து 25 ஆயிரத்து 148 பேர் அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 18 ஆயிரத்து 303 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை 63 லட்சத்து 91 ஆயிரத்து 208 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

## பதவிக்காலத்துக்கு பின்னரும் புட்டினை பாதுகாக்கும் சட்ட வரைவு சமர்ப்பிப்பு!



ரஷ்யாவின் ஜனாதிபதிகள் தமது பதவிக்காலத்துக்கு பின்னரும் தமக்கெதிரான வழக்குகளில் இருந்து தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவான சட்ட வரைவு அந்நாட்டின் சட்டவாக்க பிரதிநிதிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு, ரஷ்யாவின் தற்போதைய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்தபின்னர், அவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கிரிமினல் சட்ட நகர்வுகளில் இருந்து அவரைப்பாதுகாக்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் தற்போதைய சட்ட நடைமுறைகளின்பிரகாரம், அந்நாட்டின் ஜனாதிபதியை அவரது பதவிக்காலத்தில், எவ்வித மான கிரிமினல் சட்ட நடவடிக்கைகளுக்கும் உட்படுத்த முடியாது.

இந்நிலையில் தற்போது கொண்டுவரப்படவுள்ள இந்த சட்டம் பதவிக்காலத்துக்கு பின்னரும் அவரது அதிகாரத்தை நீடிப்பதற்கான முன்னெடுப்பாக அமைகிறது.

இந்த சட்டவரைவு, இந்த வருட ஆரம்பத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினால் ஏற்படுத்தப்பட்ட சர்ச்சைக்குரிய அரசமைப்பு சட்டத் திருத்தத்தை ஆதரித்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# கொரோனாத் தொற்றாளர்கள் கிழக்கு மாகாணத்தில் அதிகரிப்பு!

## கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் கவலை

மட்டக்களப்பு நகரில் இன்று ஒருவருக்கு கொரோனா தொற்று .இனங்காணப்பட்டுள்ளதுடன் கிழக்கு மாகாணத்தில் கொரோனா தொற்றாளர்களின் தொகை 87ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

கிழக்கு மாகாணத்தில் பேலியகொட மீன்சந்தையில் இருந்து ஆரம்பித்த இந்த பரம்பல் மாகாணத்தின் பல இடங்களில் அடையாளப்படுத்தப்பட்டுவருகின்றது. பேலியகொட மீன்சந்தை கொத்தணிக்கு பின்னர் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஊடாக இதுவரையில் கிழக்கு மாகாணத்தில் 87பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை பிராந்தியத்தில் 07 நபர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 47 நபர்களும் திருகோணமலை மாவட்டத்தில் 13 நபர்களும் கல்முனை பிராந்தியத்தில் 20 நபர்களுமாக மொத்தமாக 87 பேர் சுகாதாரத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை யின் ஊடாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமையும் நேற்று முன்தினமும் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் புதிதாக ஏறாவூர் பிரதேசத்தில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் கொழும்பில் இருந்து 13 நாள்களுக்கு முன்னர் திரும்பியவர். எதேச்சையாக அவர் அடையாளம் காணப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் .பரிசோதனை மூலமாகத் தொற்றுள்ளது என அடையாளம் காணப்பட்டுள்ளது. அதேபோன்று செங்கலடியில் வியாபாரம் செய்யும் நபர் ஒருவர் மட்டக்களப்பைச் சேர்ந்த வருக்கு தொற்று உறுதிப்படுத்தியுள்ளது.

கொழும்பில் இருந்து பயணம் செய்தபோது தொற்று ஏற்பட்டதா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொறளைப்பற்று மத்தியில் பேலியகொடவுடன் நேரடியாகத் தொடர்புபட்ட ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று கல்முனை பிராந்தியத்தில் இறக்காமம் பகுதியில் ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த ஒருவரின் குடும்ப உறுப்பினர்கள் இருவர் தொற்றுள்ளது என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதேபோன்று அம்பாறை, தெகியத்தன்கண்டிய பகுதியை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொழும்பில் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் 22ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரையில் தனது வீட்டுக்கு வந்துசென்றுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போதைக்கு காத்தான்குடி ஆதார வைத்தியசாலை, ஈச்சிலம்பற்று ஆதார வைத்தியசாலை, கரடியனாறு வைத்தியசாலை, பாலமுனை வைத்தியசாலை, பதியத்தலாவ வைத்தியசாலையென ஐந்து வைத்தியசாலைகள் கொவிட் தொற்றுள்ளவர்களைப் பராமரிக்கின்ற வைத்தியசாலைகளாகக் காணப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றுள்ள அனைவரும் கிழக்கு மாகாணத்துக்குள்ளேயே பராமரிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றமையையிட்டு ஓரளவு திருப்தியடைகின்றோம்.

சில மாகாணங்களில் தொற்றுள்ளவர்கள் வேறு மாகாணங்களுக்கு அனுப்பும் நிலையிருக்கின்றது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் ஐந்து வைத்தியசாலைகள் காணப்படுகின்ற காரணத்தால் கிழக்கு மாகாணத்தில் தொற்றுள்ளவர்களை அவர்களுக்கு சிகிச்சையளித்து பராமரிக்கின்ற நிலையேற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது காத்தான்குடி வைத்தியசாலையில் 94 கொரோனா தொற்றாளர்களும் ஈச்சிலம்பற்று வைத்திய சாலையில் 6 நபர்களும் கரடியனாறு வைத்திய சாலையில் 71 பேரும் பதியத்தலாவ வைத்தியசாலையில் 20 நபர்களும் பாலமுனை வைத்தியசாலையில் 70 நபர்களுமாக 261பேர் தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

பேலியகொட தொற்று ஏற்பட்டதன் பின்னர் மொத்தமாக 624 பேரைப் பராமரித்திருக்கின்றோம். பராமரித்துக்கொண்டிருக்கின்றோம். கடந்த மூன்று நாள்களுக்குள் 361பேரை நாங்கள் சுகப்படுத்தி அவர்களை வீடுகளுக்கு அனுப்பியுள்ளோம்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாகக் கொரோனா தொற்றாளர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஊடாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் ஒரு குறிப்பிட்டளவிலேயே பி.சி.ஆர் சோதனை செய்யமுடியும். தொற்றுள்ளவர்கள் பலர் காணப்படலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடியில் இனங்காணப்பட்ட நபர் பல இடங்களுக்குப் பிரயாணம் செய்துள்ளார். அதேபோன்று ஏறாவூரில் இனங்காணப்பட்டவரில் ஒருவர் மீன்சந்தையுடன் தொடர்புடையவர் மற்றையவர் கொழும்பில் இருந்து வந்தவர். மீன்சந்தையுடன் தொடர்புபட்டவரின் தொற்று தொடர்பில் இதுவரையில் கண்டறியப்படவில்லை. பல ஊகங்களுக்கு மத்தியில் அந்த நபருடன் சார்ந்தவர்களையும் தனிமைப்படுத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்கள் சுகாதார பிரிவினரால் தெரிவிக்கப்படும் விடயங்களை சரியான முறையில் பின்பற்றுங்கள். அவ்வாறு நீங்கள் அதனைக் கடைப்பிடிக்கும்போதே கொரேனா தொற்றில் இருந்து உங்களைப் பாதுகாக்கமுடியும்.

அனைத்து துறையினரும் இந்த தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இயலுமான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் இருந்தபோதிலும் தொற்றுக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. தொற்றுடன் தொடர்புபட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவருகின்றது. எங்களால் மட்டும் அனைவரையும் கண்காணிக்கமுடியாது. பொதுமக்கள் வெளியில் செல்கின்றமையைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அவசியமான தேவைகள் இருந்தால் மட்டும் வெளியே செல்லுங்கள். வெளியில் செல்லும்போது அருகில் செல்வதை தவிர்த்து சமூக இடைவெளியையும் தனிநபர் இடைவெளியையும் பின்பற்றுங்கள். - எனத் தெரிவித்துள்ளார்.

# கூட்டுறவுச் சேவைகளை முன்னெடுக்க ஆளுநர் முஸம்பில் நடவடிக்கைகள்

கொழும்பு, நவ.07

கொரோனா தொற்று நிலவும் இந்தக் காலப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் சேவைகளை எவ்வாறு சரியான முறையில் முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பில் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் கலந்துரையாடலொன்று ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடன் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பொதுமக்களுக்குப் பற்றாக்குறையில்லாமல் அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் கூட்டுறவுத் திணைக்களம் முகங்கொடுக்கும், வாடிக்கையாளர் கொள்வனவு செய்யும் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் உள்ள சிரமங்கள், போக்குவரத்து வசதிகள், ஊழியர்கள் சமூகமளிப்பதில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்குக் கூடிய விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்து, திணைக்களத்தின் வேலைத்திட்டங்களைத் தடங்கலின்றி முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இதன்போது ஆளுநர் முஸம்மில் ஆலோசனை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் ஊவா மாகாண பிரதான செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி சபையின் ஆணையாளர், ஊவா கூட்டுறவுச் சங்கத்தின் கணக்காளர், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

# எனக்கு அழுத்தம்கொடுக்கவில்லை என்கின்றார் மஹிந்த தேசப்பிரிய!

நான் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளராக இருந்த காலப்பகுதியில் எனக்கு எவரும் அழுத்தங்களை பிரயோகிக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும், மாகாணசபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தமுடியாமல் போனமை கவலை அளிக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராகச் செயற்படும் மஹிந்த தேசப்பிரிய, எதிர்வரும் 12ஆம் திகதியுடன் ஓய்வு பெறவுள்ளார். இதனையடுத்து அவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்று வழங்கப்படவுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஊடகங்கள் வினவியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மஹிந்த தேசப்பிரிய மேலும் கூறியுள்ளவை வருமாறு -

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் எந்தவொரு பதவியையும் ஏற்கும் எண்ணம் எனக்கு கிடையாது.

எனது ஓய்வு காலத்தை மிகவும் அமைதியான முறை



யில் வாழ்வதற்கு ஆசைப்படுகின்றேன். மேலும், நான் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளராக இருந்த காலப் பகுதியில் எனக்கு எவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை.

ஆனாலும், மாகாணசபைத் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தமுடியாமல் போனது கவலை அளிக்கின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா - கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று மஹாம்ருத்யுஞ்சய ஹோமம்

வவுனியா—கந்தசுவாமி ஆலயத்தில் மஹாம்ருத்யுஞ்சய ஹோமம் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் நாட்டுக்கு ஆசி கோரும் வகையிலும், ஒட்டுமொத்த உலக மக்களையும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாக்குமாறு ஆசி கோரும் வகையிலும், சகல பௌத்த விஹாரைகளிலும் ரத்தன சூத்திர மந்திர உச்சாடனத்தை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நாடு முழுவதிலும் உள்ள இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வணக்கஸ்தலங் களிலும் விசேட பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபடுமாறும் பிரதமரினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவுறுத்தலுக்கமைய அனைத்து வணக்கஸ்தலங்களிலும் விசேட பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில், நேற்று கந்தசுவாமி ஆலய அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில், மஹாம்ருத்யுஞ்சய ஹோமம் இன்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் சமன் பந்துலசேன, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மாவட்ட சிறுவர் உரிமை மேம் பாட்டு அதிகாரி ஜோன் ஹென்னடி, சிவஸ்ரீ பிரபா ரக்குருக்கள், சுகாரதார பரிசோதகர்கள் மற்றும் அடியார்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# வெலிக்கடைச் சிறையில் 23 கைதிகளுக்கு தொற்று

வெலிக்கடை சிறைச்சாலையில் 23 கைதிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அவர்களில் 22 பேர் பெண்கள் என சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

# 20 ஆவது திருத்தம் கோட்டாவுக்கு வரம் அதைத் தமிழ் மக்களின் சாபம் ஆக்காதீர்!

## மீறினால் கடைசியில் அது நாட்டுக்கே சாபமாகி விடும் பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம்,நவம்பர் 07

நிறைவேற்று அதிகாரங்களைத் தனக்கு மீட்டெடுக்கும் முயற்சியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்றுள்ளார். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் ராஜபக்ஷ குடும்பத்தின் கைகளுக்கு அதிகாரங்கள் போய்விடக் கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட 19ஆவது திருத்தத்தில் ராஜபக்ஷ சகோதரர்கள் தங்களுக்குச் சாதகமான திருத்தங்களைக் கொண்டுவந்து 20 ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு தவமாகவே இருந்து நிறைவேற்றியுள்ளனர். இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அசுரப் பலத்தைப் பெற்றுக்கொடுத்திருக்கும் ஒரு வரம் ஆகும். ஜனாதிபதி அதை ஒருபோதும் தமிழ் மக்களின் சாபமாக்கி விடக்கூடாது. அவ்வாறு நேரின் கடைசியில் அது முழு நாட்டுக்குமே பெரும் சாபமாகி விடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் வடக்கு மாகாண விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாகப் பொ. ஐங்கரநேசன் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளே இஸ்லாமியப் பயங்கரவாதத்தைக் கடந்த அரசாங்கத்தால் ஒடுக்க முடியாமல் போனது என்றும், நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாகத் தான் இருந்தமையாலேயே விடுதலைப் புலிகளை அழிக்க முடிந்தது என்றும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், இஸ்லாமியத் தீவிரவாதத்தை ஒடுக்க முடியாமற் போனதற்கும், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க முடிந்தமைக்கும் அரசமைப்புக் காரணம் அல்ல. இஸ்லாமியத் தீவிரவாதம் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டமைக்குப் பாதுகாப்புத் தரப்பில் இருந்த குறைபாடுகளும், விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலின் பின்னர் மாறிய சர்வதேச அரசியல் நிலவரங்களுமே காரணங்களாகும். இக்காரணங்களைத் தவிர்த்து பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களை வேண்டி நிற்பது அரசாங்கத்தால் பயங்கரவாத கண்கொண்டு நோக்கப்படும் சிறுபான்மையின மக்கள் மனதில் சந்தேகங்களையே விதைத்திருக்கிறது.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் மிக்கவராக மாறியவுடனேயே அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ மேற்கொண்ட இலங்கை விஜயமும், இதன்போது அவர் சீனாவை இலங்கையைச் சூறையாடும் ஒரு வேட்டைக்காரனாக உருவகித்து ஆற்றிய உரையும், தொடர்ந்து அவசரம் அவசரமாகத் தமிழ்த் தேசியத் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் இடையில் நிகழ்ந்த சந்திப்பும் இலங்கை இந்நாடுகளுக்கிடையேயான இந்தோ பசுபிக் போட்டியின் மோது களமாகியுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தபோது அவர் எடுத்திருந்த அமெரிக்க சார்பு நிலைப்பாடு ஈழத்தமிழர் பிரச்சினையைக் காரணங்காட்டி இந்தியா இலங்கையில் தலையிடக் காரணமாக அமைந்தது. இந்தியாவுக்கு எதிராக ராஜபக்ஷ சகோதரர்கள் எடுத்த சீனச் சார்பு இப்போது அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கைக்கு இராஜ தந்திர நெருக்குதல்களைக் கொடுக்கக் காரணமாக அமைந்துள்ளது.

ஈழத் தமிழர்கள் தமிழ் நாட்டுடன் கொண்டிருக்கும் உறவு காரணமாக இலங்கை ஒருபோதும் இந்தியாவை நேசநாடாகக் கருதியதில்லை. இனிமேலும் கருதப்போவதுமில்லை. இதனாலேயே எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் இலங்கையில் சீனாவை அதிகம் காலூன்ற அனுமதித்திருக்கிறது. அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக யுத்தம் இப்போது பனிப்போராக மாறியிருக்கிறது. அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகளினதும் குவாட் அணி வெளிப்படையாகவே சீனாவை எதிர்த்து வருகிறது. இந்நிலையில், சீனச்சார்பு நிலை எடுத்திருக்கும் இலங்கையின் நடுநிலையற்ற வெளி உறவுக்கொள்கை காரணமாக இந்நாடுகளின் அழுத்தங்களுக்கு இலங்கை அடிபணிய வேண்டிய இக்கட்டுக்கு ஆளாகியுள்ளது.

வல்லரசுகளின் போட்டிக்களமாக இலங்கை சிக்கியுள்ளமைக்கு தீர்க்கப்படாது நீண்டு செல்லும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினையே அடிப்படைக் காரணமாகும். நிறைவேற்று அதிகாரப் பலத்தாலேயே விடுதலைப் புலிகளைத் தங்களால் தோற்கடிக்க முடிந்தது என்று கூறிய ராஜபக்ஷ குடும்பமே இன்று ஆட்சியில் இருப்பதால், அதே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கான நிரந்தரமான அரசியல் தீர்வினையும் புதிய அரசியல் யாப்புக்கு ஊடாகப் பெற்றுத்தர முடியும். தவறினால் இலங்கையின் இறைமையையே பாதிக்கக்கூடிய அளவிற்கு தமிழ் மக்களை ஒரு துருப்புச் சீட்டாக வைத்து வல்லரசு நாடுகள் ஆடும் இந்தப் பூகோள அரசியல் போட்டியில் இலங்கை பலிக்கடாவாவது தவிர்க்க முடியாததாக ஆகிவிடும். - என்றும் தெரிவித்துள்ளார்.

# திங்கட்கிழமை முழு நாடும் திறக்கப்படும்!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



புதிய வழமைப்படுத்தல் திட்டத்தின்கீழ், எதிர்வரும் திங்கட்கிழமை முதல், நாடு முழுமையாகத் திறக்கப்படலாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், நாடு திறக்கப்படும் சந்தர்ப்பத்தில், உலகில் தற்போது நடைமுறையில் உள்ள எண்ணக்கருவின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய வழமைப்படுத்தல் என்ற அடிப்படையிலான அந்த எண்ணக்கருவுக்கு, உலக சுகாதார ஸ்தாபனத்தால்கூட, சில ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, கொரோனா வைரஸ் பரவல் இருக்கின்ற நிலையில், அதனுடன் வாழப் பழகுவது தொடர்பான எண்ணக்கருவே அதுவாகும் என அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி, மேலும் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு இந்த நோய்த் தாக்கம் இருக்கும்.

எனவே, வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில், அதனைக் கட்டுப்படுத்தி வாழவேண்டிய நிலை உள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, மக்களின் ஒத்துழைப்பு நூற்றுக்கு 100 வீதம் அவசியமாகும் என அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்திலும் கொரோனா தொற்று அதிகரிப்பு!

மட்டக்களப்பு நகரில் நேற்று இனங்காணப்பட்ட கொரோனா தொற்றாளரின் மூன்று குடும்ப உறுப்பினர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு லொயிட்ஸ் வீதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை உள்ள ஒருவருக்கு கொரோனா தொற்று இனங்காணப்பட்டது.

இவர் செங்கலடியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் கடமையாற்றிவரும் நிலையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் மூலம் இவருக்கு கொரோனா தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த அடிப்படையில் நேற்று காலை அவரை சுகாதார பிரிவினர் சிகிச்சைக்காக அழைத்துச்சென்ற அதேவேளை குடும்ப உறுப்பினர்கள் தனிமைப் படுத்தப்பட்டு பி.சி.ஆர் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த நபரின் மனைவி மற்றும் 16 வயதுடைய மகள்,13 வயதுடைய மகன் ஆகியோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதுடன் இன்னொரு மகனான 20 வயதுடைய மகனுக்கு தொற்று ஏற்படவில்லையெனவும் சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

குறித்த குடும்பத்துடன் தொடர்புகளைப் பேணியவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறும் சுகாதார பிரிவினரிரை தொடர்புகொள்ளுமாறும் கேட்டுள்ளனர்.

# கிழக்கு மாகாணத்தில் கொரோனா பாதிப்பு 90 ஆக உயர்ந்துள்ளது!

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர்

கிழக்கு மாகாணத்தில் இதுவரை 90 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சுகாதாரப் பணி ப்பாளர், மருத்துவர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் 14 மற்றும் 16 வயதுச் சிறுவர்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு இன்று கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா பாதிப்பு 50ஆக அதிகரித்துள்ளதாக கிழக்கு மருத்துவர் லதாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு செங்கலடி பிரதேசத்தில் வர்த்தக நிலையத்தில் கடமையாற்றிவரும் மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த ஒருவருக்கு பி.சி. ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, அவரின் குடும்பத்தினருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே மூவருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், கிழக்கில் அம்பாறை பிராந்தியத்தில் ஏழு பேரும், மட்டக்களப்பில் 50 பேரும் திருகோணமலையில் 13 பேரும் கல்முனை பிராந்தியத்தில் 20 பேரும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என லதாகரன் குறிப்பிட்டுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.11.2020 இல் வெளியிடப்பெற்றது.